THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 5th August 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at hilf past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

தமிழ்ப் பயிற்சிமொழித் திட்டம்

*101 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் மீடியம் புரோகிராம் எவால்யூவேஷன் கமிட்டி (Tamil Medium Programme Evaluation Committee) என்று ஒன்று நியமிக்கப்பட்டதா ?

(இ) அதன் வேலைகள் என்னென்ன ? வேலைகள் பூர்த்தியாகி விட்டனவா ?

(உ) ஆமெனில், அதன் அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப் படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) தமிழ்மொழி வாயிலாக இம்மாநிலத்திலுள்ள கல்லூரிகளில் பயிற்சி அளிப்பதில் ஏற்படும் கல்வி மேம்பாட்டை மதிப்பீட்டுக்காகவும் ஆங்கிலத்தின் மூலம் பயிற்சி அளிப்பதையும் தமிழ் மொழி வாயிலாகப் பயிற்சி அளிப்பதையும் ஒப்பிட்டு ஆராயவும் தமிழ்ப்பயிற்சி மொழித் திட்ட மதிப்பீட்டுக்குழு (The Programme Evaluation Committee) ஒன்று அமைக்கப்பட்டது.

(உ) அரசாங்கம் இக்குழுவின் அறிக்கையைப் பரிசீலித்து வருகிறது. அந்த அறிக்கை கூடிய விரைவில் சபை முன் வைக்கப் படும்.

திரு. து. ப. அழகமுத்து : இது எப்போது முதல் அமலுக்குக் கொண்டுவரப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பல விஷயங்கள் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டில் எல்லா புகுமுக வகுப்புகளிலும் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. செ. மாதவன் : தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துக் கொள்வதற்கு மாணவர்களுக்கு ஏற்படும் சங்கடங்களைப்பற்றி இந்தக் கமிட்டியால் ஆராயப்பட்டதா ? ஆங்கிலத்தில் படிப்பதற்கு என் முன் வருகிறார்கள் என்பதைப் பரிசீலித்ததா ?

[5th August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அறிக்கையை இந்தச் சபைமுன் வைக்கும்போது அவர்கள் என்னென்ன கருத்து தெரிவித்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளலாம்.

திரு. வை. சங்கரன் : அரசாங்கத்தின் இறுதி லட்சியம், கல்லூரி மட்டத்திலே தமிழைப் பயிற்சி மொழியாக வைக்க வேண்டுமென்பதா? அந்த லட்சியத்தை ஒட்டித்தான் இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தின் இறுதி லட்சியம் இதுதான். தமிழ்ப் பயிற்சி மொழி மூலம் கல்வி கற்பிக்கப் படும்.

* 102 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் தமிழும் போதனு மொழி ஆக்கப்படும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகளின் விவரமென்ன?

(இ) எந்த ஆண்டு முதல் அது அமலுக்கு வரும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : The Government have issued orders to introduce Tamil medium in Pre-University course in one Section in Humanities in all the Government Arts Colleges in this State with effect from 1966-67.

திரு. செ. மாதவன் : எல்லாக் கல்லூரிகளிலும் கலைப் பாடம் மட்டும் எடுக்கும் மாணவர்களுக்குத் தான் தமிழ் பயிற்சி மொழியாக வைக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதா? அல்லது, விஞ்ஞானப் பாடங்களிலும் தமிழ் மூலம் போதிக்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது பல்கலைக்கழகம் அங்கீகாரம் அளித்திருப்பது கலைப்பாடங்களுக்கு மட்டும்தான். விஞ்ஞானப் பாடங்களைப் படிப்பதற்குப் போதிய தமிழ் நூல்கள் வேண்டியிருக்கின்றன.

திரு. சா. கணேசன் : விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் பயிற்று விப்பதற்கு விஞ்ஞானக் கலைச் சொற்களை 'இன்டர்நேஷனல் டேர்ம்ஸ்', அதாவது சர்வதேச சொற்களைக் கையாள்வது பயனுடையதாகவும் இருக்கும், சுலபமாகவும் இருக்கும், வாய்ப் புள்ளதாகவும் இருக்கும். ஆகவே, அதன்படி செய்ய உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கருத்துப்படிதான் கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நான் உதகைக் கலைக் கல்லூரியில் இந்த ஆண்டு தேர்வுக் குழு அங்கத்தினராக இருந்தேன். 300 மார்க்குகள்—நல்ல மார்க்குகள் வாங்கியவர்களைத்தான் சைன்ஸ் க்ரூப்பில் சேர்த்துக் கொண்டார்கள். குறைந்த மார்க்கு